*9*

# தக்கவகையிலான கருத்துநோக்கில் பெண்களின் பணிப்பொறுப்பு

*சில சமூகங்களில் பெண்களின் விஷயங்களைச் சுற்றிச் சூழ்ந்துள்ள உணர்வுப்பூர்வமான சூழ்நிலையினிமித்தம், வேதாகமக் கண்ணோட்டக் கருத்துக்களை ஏற்றவகையில் காத்துக்கொள்ளுதல் என்பது கடினமானதாக உள்ளது. பெண்கள், ஆண்களைப் போல் மிருக பலம் அற்றவர்கள் என்ற அர்த்தத்தில், அவர்கள் “பெலவீன பாண்டம்” (1 பேதுரு 3:7) என்று கூறப்பட்டாலும், அவர்கள் ஆண்களைவிட எவ்வகையிலும் தாழ்ந்தவர்கள் என்று கூறப்படுவதில்லை. பெண்களைச் சிறுமைப்படுத்துவதற்காகப் பேதுரு இந்தக் கூற்றை எழுதவில்லை; அவர் பெண்களின் சார்பாகவே பேசினார். கணவர்கள் தங்கள் மனைவிகளிடம் ஆழ்ந்த அக்கறையுடைய வர்களாயிருந்து, தங்களின் சரீரபலம் என்ற அனுகூலத்தை அவர்கள்மீது தவறாக பயன்படுத்தவோ அல்லது செயல்படுத்தவோ கூடாது என்று அவர் ஊக்கப்படுத்தினார்.*

## வேறுபாடுகள்

*கலாச்சாரம் என்பது பெண்களை “பெலவீன” பாண்டமாக்குவதில்லை. இது தேவன் ஆதாமையும் ஏவாளையும் உண்டாக்கியபோது தீர்மானம் செய்த உடல்ரீதியான வேறுபாடாக உள்ளது. தேவன், ஆண்களுக்கும் பெண்களுக்கும் வித்தியாசமான/தனிப்பட்ட பணிப்பொறுப்புகளைத் திட்டமிட்டதால், அவர்களுக்கென்று நோக்கங்கொள்ளப்பட்ட பணிப்பொறுப்புக்களை அவர்கள் செயல்படுத்த உதவும்படியாக அவர்களை அவர் வேறுபாடுகளுடன் படைத்தார். இந்தப் பணிப்பொறுப்புக்களை மாற்றுவதற்குச் சமூகம் முயற்சி செய்யலாம்; இருப்பினும், ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரின் உடல் அமைவின் காரணமாகவே, சில பணிப்பொறுப்புக்கள் பெண்களுக்கு அல்லது ஆண்களுக்கு மாத்திரம் உரியவைகளாய் இருக்கின்றன. சில பணிப்பொறுப்புக்கள் ஆண்களுக்கு அதிகம் பொருத்தமானவைகளாய் இருக்கின்றன, சில பணிப்பொறுப்புக்கள் பெண்களுக்கு அதிகம் பொருத்தமானவைகளாய் இருக்கின்றன, மற்றும் சில பணிப்பொறுப்புக்கள் ஆண்கள் மற்றும் பெண்களால் சமமாகப் பகிர்ந்துகொள்ளக் கூடியவைகளாய் இருக்கின்றன. ஆண்களும்*

*பெண்களும் வேறுபட்ட வகையில் செயல்பட்டு தங்கள் தனிப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கென்றே தேவன் அவர்களை வேறுபட்டவகையில் படைத்தார்.*

*நிலைப்பாடுகள் மற்றும் வேறுபாடுகள் ஆகியவை மேலான தன்மை அல்லது கீழான தன்மை என்பவற்றை மறைமுகமாய் உணர்த்த வேண்டும் என்று அவசியமில்லை. அரசாங்கத்திற்குக் கீழ்ப்படியும் குடிமக்கள் (ரோமர் 13:1-5; 1 பேதுரு 2:13), எஜமானர்களுக்குக் கீழ்ப்படியும் அடிமைகள் (தீத்து 2:9), நடத்துனர்களுக்குக் கீழ்ப்படியும் சபை உறுப்பினர்கள் (எபிரெயர் 13:17) மற்றும் பெற்றோர்களுக்கு கீழ்ப்படியும் பிள்ளைகள் (எபேசியர் 6:1) ஆகியோர், தங்கள் மீது அதிகாரம் செலுத்துபவர்களைவிட திறமை யிலும் புத்திக்கூர்மையிலும் மேலானவர்களாய் இருக்கலாம். சிலவகையில் சமமாகவும் மற்றவற்றில் வேறுபட்டும் இருத்தல் என்பது மனித உறவுமுறைகளைப் பொறுத்தமட்டில் வேதாகமத்தின் ஆய்வுக்கருத்தாக உள்ளது.*

*கீழ்ப்படிதல் என்பது கட்டளையிடுதலைக் காட்டிலும் கடினமானதாயிருக்கலாம், ஏனெனில் கீழ்ப்படிகின்றவருக்கு, கட்டளையிடுபவரை காட்டிலும் அதிகமான சுயகட்டுப்பாடு தேவையாகலாம். கீழ்ப்படிதலுக்கு ஒருவர் தமது சுயசித்தத்தின்மீது ஆளுகையுடையவராய் இருத்தலும், திறமை, செயல்பாங்கு, புத்திகூர்மை அல்லது நிபுணத்துவம் ஆகியவற்றில் தன்னைவிட மேலான தன்மையற்ற இன்னொருவருக்கு இணங்கிச்செல்ல மனவிருப்பம் கொண்டிருத்தலும் தேவைப்படுகின்றன.*

## கிறிஸ்துவுக்குள் எல்லாரும் ஒன்றாயிருக்கிறோம்

*பெண்கள், கிறிஸ்துவின் சரீரத்தில் உறுப்புகள் என்ற வகையில் ஆண்களுக்குக் கீழ்ப்படியும் பொறுப்புக் கொண்டிருப்பதில்லை என்று உறுதிப்படுத்துகின்றவர்கள் கலாத்தியர் 3:28ல் புகலிடத்திற்கான ஒரு முகப்பைக் கண்டறிகின்றனர்: "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்று மில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்." இதைச் சிலர், கிறிஸ்தவர்கள் யாவரும் ஒரே வகையிலான ஆவிக்குரிய பணிப்பொறுப்புக்களைக் கொண்டுள்ளதென்று அர்த்தப்படுத்துவதாக விளக்குகின்றனர்.*

*எல்லாக் கிறிஸ்தவர்களும் ஒரேவகையிலான ஆவிக்குரிய வரங்களைக் கொண்டிருக்கவில்லை, ஏனெனில் அவைகள் ஆவியானவரின் சித்தத்தின்படி ஒவ்வொருவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன (1 கொரிந்தியர் 12:11). "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமை களாயினும், சுயாதீனராயினும்" (1 கொரிந்தியர் 12:13அ) எல்லாரும் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருந்ததாகப் பவுல் கூறினார். இந்தக் கருத்தை, அவர் மனிதனின் உடலைப் பயன்படுத்தி விவரித்தார். உடலில் பல உறுப்புக்கள் உள்ளன, அந்த உறுப்புக்கள் பல்வேறுபட்ட*

*பணிகளைக் கொண்டுள்ளன; கிறிஸ்துவின் சரீரமும் அதுபோன்றே உள்ளது (1 கொரிந்தியர் 12:15-22). பவுல், "எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா?" என்று கேட்டார் (1 கொரிந்தியர் 12:29). கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருத்தல் என்பது, எல்லாரும் ஒரேவகையான பொறுப்பையோ அல்லது அதிகாரத்துவத்தையோ கொண்டிருப்பதாக அர்த்தப்படுவதில்லை.*

*சபையில் எல்லாக் கிறிஸ்தவர்களும் ஒன்றாயிருந்தாலும், அப்போஸ்தலர்கள் அதிகாரத்தின் நிலையை தக்கவைத்துக் கொண்டிருந்தனர் (1 தெசலோனிக்கேயர் 2:6). ஒன்றாயிருத்தல் என்பது, சபையில் உள்ள ஒவ்வொருவரும் அப்போஸ்தலர்களுக்குச் சமமான அதிகாரத்துவம் கொண்டுள்ளனர் என்று அர்த்தப்படவில்லை. எஜமானரும் அடிமையும் கர்த்தருக்குள் இருந்தபோதிலும், அடிமையின்மீது எஜமானர் தொடர்ந்து அதிகாரம் கொண்டவராகவே இருந்தார் (தீத்து 2:9). ஆண்களும் பெண்களும் தங்களை நடத்துபவர்களுக்கு ஒன்றுபோலவே கீழ்ப்படிய வேண்டியிருந்தது (எபிரெயர் 13:17). மனைவியர்கள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியிருந்தது (எபேசியர் 5:24), மற்றும் பெண்கள் சபைக்குழுமத்தில் தங்களை நடத்துபவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டியிருந்தது (1 தீமோத்தேயு 2:11). கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருத்தல் என்பது, எல்லாரும் அதிகாரத்தின் ஒரேவிதமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர் என்று அர்த்தப்படுவதில்லை.*

*மூப்பராகத் தகுதி பெற்றிராத ஒரு எஜமானர், மூப்பராகத் தகுதிபெற்று மூப்பராகியுள்ள ஒரு அடிமைக்குக் கீழ்ப்படிய வேண்டியிருக்கையில் அவருக்குள் [எஜமானருக்குள்] இருக்கக்கூடிய உள்ளான மனப் போராட்டத்தைக் கற்பனை செய்துபாருங்கள். இப்படிப்பட்ட உறவுமுறையில், எஜமானரின் பகுதியில் கீழ்ப்படிவதற்கான மனவிருப்பமே திறவுகோலாக இருக்கும். அவர்களின் ஆவிக்குரிய உறவுமுறைகளுக்கு புறம்பேயுள்ள சூழ்நிலைகள் வேறுபட்டிருந்தால், இது எஜமானரின் பகுதியில் மாபெரும் பண்பைக் கேட்பதாயிருக்கும் என்பது நிச்சயம். சில பெண்கள், தாங்கள் யாருக்குக் கீழ்ப்படிய வேண்டுமோ, அவர்களைக் காட்டிலும் மாபெரும் திறன்கள் கொண்டிருப்பதால் இதேவிதமான போராட்டத்தை எதிர்கொள்ளுகின்றனர். அவர்கள் தாழ்மையான கீழ்ப்படிதலில் பதில் செய்தலினால் தேவனுடைய சித்தத்தைத் தாங்கள் மதிப்பதையும் தங்கள் மாபெரும் தன்மையையும் காண்பிக்க முடியும். ஆணோ பெண்ணோ, கிறிஸ்தவர்கள் யாவரும் தேவனுடைய ஏற்பாட்டை ஒப்புக்கொண்டாக வேண்டும்.*

*பெண்களுக்கு நடத்துவப் பணிப்பொறுப்புகளைக் கொடுக்க நாடுகின்றவர்கள், ஒரு பெண்ணுக்கு அதிகாரத்துவத்தின் பதவி அளிக்கப்பட்டால், யாரேனும் ஒருவர் அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று உணர வேண்டும். அது யாராயிருக்கும்? பிள்ளைகள் மட்டுமா? பெண்கள் உள்ளடக்கப்பட்டு ஆண்கள் தவிர்க்கப்பட முடியுமா? பெண்கள் சிலருக்கு அதிகாரத்துவம் கொடுக்கப்பட்டால், மற்ற*

பெண்கள் இன்னமும் (அதற்கு) கீழ்ப்படிய வேண்டிய நிலையிலேயே இருப்பார்கள். ஒவ்வொருவரும் பொறுப்புடையவர்களாய் இருக்க இயலாது. யாரேனும் சிலர் பொறுப்புக்கொண்டிருந்து அவர்களுக்கு மற்றவர்கள் கீழ்ப்படிய வேண்டும் என்ற நிலையில்லாது, ஒரு குழுவானது ஒன்றுகூடிப் பணியாற்றுவதற்கான வெற்றிகரமான ஏற்பாடு எதையும் ஏற்படுத்த இயலாது (எபிரெயர் 13:17). நாம் யாவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருந்தாலும், நாம் யாவரும் ஒரேவிதமான பணிப்பொறுப்புகளைக் கொண்டிருக்க முடியாது. ஒன்றாயிருத்தல் என்ற கருத்து, எல்லாரும் கிறிஸ்துவுக்குள் ஒரேவிதமான பணிப்பொறுப்பை அல்லது நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர் என்ற கருத்தைப் பவுல் நீக்கிப்போட்டார் (1 கொரிந்தியர் 12:4-31; ரோமர் 12:6-8; எபேசியர் 4:11-13ஐக் காணவும்).

கலாத்தியர் 3:28ல் பவுல் கூறியது என்ன? கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற யாவரும் தேவனுடைய பிள்ளைகளாகி, ஒரே சரீரத்தில் இணைவதாக மாத்திரமே அவர் கூறினார். ஞானஸ்நான மானது ஒரு நபரை யூதருடைய சபையின் உறுப்பினராகவும், ஒரு நபரைப் புறஜாதியாருடைய சபையின் உறுப்பினராகவும், ஒருவரை அடிமைகளின் சபையில் உறுப்பினராகவும், ஒருவரைச் சுயாதீனர்களின் சபையில் உறுப்பினர்களாகவும், அல்லது ஒருவரை ஆண்களின் சபையில் உறுப்பினராகவும் ஒருவரைப் பெண்களின் சபையில் உறுப்பினராகவும் ஆக்குவதில்லை. ஞானஸ்நானம் என்பது நம் எல்லாரையும் "ஒன்றாக" - ஒரே சபையின் உறுப்பினர்களாக - ஆக்குகிறது (கலாத்தியர் 3:27; ரோமர் 12:4, 5; கொலோசெயர் 3:11).

நமது வேறுபாடுகளின் அடையாளங்கள் கிறிஸ்துவுக்குள்[ளும்] நிலைத்திருக்கின்றன: ஆண்களும் பெண்களும் இன்னமும் ஆண்களாகவும் பெண்களாகவும் இருக்கின்றனர்; அடிமையும் எஜமானரும் இன்னமும் அடிமையாகவும் எஜமானராகவும் இருக்கின்றனர்; யூதர்களும் புறஜாதியார்களும் இன்னமும் யூதர்களாகவும் புறஜாதியாராகவும் இருக்கின்றனர். நாம் இந்த வேறுபாடுகளுடன் வாழவேண்டும் என்றாலும், கிறிஸ்துவுக்குள் உள்ள யாவரையும் தேவன் ஒரேவிதமாக அன்புகூருகின்றார்; அவர் தமது அன்பில் பட்சபாதம் எதையும் காண்பிப்பதில்லை (ரோமர் 2:6-11). நல்லதொரு பெற்றோர், தமது குடும்பத்தில் உள்ள எல்லாப் பிள்ளைகளிடத்திலும் ஒரே விதமாக அன்புகூர்ந்தாலும், அவர்கள் ஒவ்வொருவருக்கும், வேறுபட்ட பொறுப்புக்களைக் கொடுப்பது போன்றே, தேவனும் தமது ஆவிக்குரிய குடும்பத்தில் செயல்படுகின்றார். கிறிஸ்துவுக்குள் நாம் யாவரும் ஒன்றாயிருக்கிறோம் என்ற உண்மையானது, நமது திறன்கள் மாறியுள்ளன என்றோ அல்லது நமது பணிப்பொறுப்புகள் மாறியுள்ளன என்றோ அர்த்தப்படுவதில்லை. கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பது, நாம் யாவரும் தேவனுடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளோம், ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளோம், நிலைப்பாட்டில் மாறுபாடு இருப்பினும் ஒருமைப்பாட்டைக் கொண்டிருக்க முடியும், மற்றும் தேவனு டைய ஒரேவிதமான உறவுமுறையைக் கொண்டிருக்க முடியும் என்றுதான்

அர்த்தப்படுகிறது.

## கீழ்ப்படிதல்

கீழ்ப்படிதலுடன் இருப்பதில் தவறு என்ன உள்ளது? கீழ்ப்படிதலின் முக்கியத்துவம் பற்றிய உதாரணத்தை இயேசு நமக்குக் கொடுத்துள்ளார். இயேசு, பிதாவுக்குக் கீழ்ப்படிதலுள்ளவராக இருக்கும்படிக்கு, தமது சிலாக்கியங்களை எல்லாவற்றையும் விட்டுவிட்டு தம்மையே தாழ்த்தினார் (பிலிப்பியர் 2:7, 8). நம்மீது அதிகாரத்துவம் உடையவர்களிடத்தில் நாம், கிறிஸ்து கொண்டிருந்த அதே எண்ணப்போக்கைக் கொண்டிருக்க வேண்டும் (பிலிப்பியர் 2:5). இயேசு தமது கீழ்ப்படிதலினால் மகாமேன்மைக்குள் பிரவேசித்தார் (பிலிப்பியர் 2:9-11). நாம் கீழ்ப்படிதல் உள்ளவர்களாய் இருந்தால் நாமும் அவ்வாறே பிரவேசிக்க முடியும்.

பல பெண்களுக்கு நடத்துவப் பணிப்பொறுப்புக் கொடுக்கப்படாததால் அவர்களின் திறன்கள் வீணாக்கப்படுகின்றன என்று சிலர் மறுப்புரை தெரிவிக்கின்றனர். பெண்களின் திறன்கள் வீணாக்கப்படுகின்றன என்றால், அதற்கு நடத்துவப் பொறுப்பில் உள்ளவர்களே காரணமாவார்கள். நல்ல நடத்துனர்கள் தங்களின் கண்காணிப்பின் கீழ் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களின் தகுதிவாய்ந்த உட்கண்ணோக்குகள் மற்றும் திறன்களைப் பயன்படுத்துவார்கள். எல்லா நல்ல கருத்துக்களும் ஆண்களிடத்திலிருந்து [மாத்திரம்] வருவதில்லை. செயலூக்கமிக்க நடத்துனர்கள் சபைக்குழுமத்திற்குள் இருக்கும் ஒவ்வொரு உறுப்பினருடைய உழைப்பையும் நாடுவார்கள்.

சபையை எடுத்து நடத்துதல் அல்லது பரிசுத்தவான்களுக்கு உரையாற்றுதல் என்பவற்றில் விலக்கப்படுதல் தவிர ஆண்களுக்குள்ள மற்ற எல்லா உரிமைகளையும் அனுகூலங்களையும் பெண்களும் கொண்டுள்ளனர். இது சபைக்குழுமத்தில் உள்ள ஆண்களின் பொறுப்பாயிருக்கிறது. அவர்கள் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதினாலும் சபைக்குழுமத்தின் நடத்துனர்கள் என்ற வகையில் ஆண்களுடன் ஒத்துழைப்பதினாலும் தங்களின் மாபெரும் பண்பைக் காண்பிக்க வேண்டும்.

## கலாச்சாரமா அல்லது கட்டளையா?

ஒரு முக்கியமான கேள்விக்கு ஏற்கனவே பதில் அளிக்கப்பட்டுள்ளது, ஆனாலும் அதைப் பற்றி மறுபடியும் ஆழ்ந்து சிந்தித்தல் அவசியமாகிறது: “வேதாகமத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளபடி, பெண்களின் பணிப்பொறுப்பானது, ஒரு கலாச்சாரப் பணிப்பொறுப்பாக மாத்திரம் உள்ளதா? அல்லது இது தேவனுடைய வடிவமைப்பின்படியான ஒரு பணிப்பொறுப்பாக உள்ளதா?”

வேதாகமத்தில் முன்வைக்கப்பட்டுள்ளபடி, கணவர்/மனைவி உறவுமுறையும் (எபேசியர் 5:23, 24; கொலோசெயர் 3:18) சபையில் பெண்களின் பணிப்பொறுப்பும் (1 கொரிந்தியர் 14:34) தேவனால் ஏற்பாடு செய்யப்பட்டவைகளாய் இருக்கின்றன, அவை கலாச்சார

*விஷயங்களாக மாத்திரம் இருப்பதில்லை. ஏதேன் தோட்டத்தில் பெண் செய்த பாவத்தினிமித்தம் அவள்மீது ஆளுகைசெய்யும் அதிகாரம் ஆணுக்குத் தரப்பட்டது (ஆதியாகமம் 3:16). தேவன் ஆணையும் பெண்ணையும் படைத்தபோது செய்த ஏற்பாட்டின் அடிப்படையிலும் (1 கொரிந்தியர் 11:9; 1 தீமோத்தேயு 2:13). ஆதாம் அல்ல ஆனால் ஏவாளே வஞ்சிக்கப்பட்டாள் என்பதாலும் (1 தீமோத்தேயு 2:14) ஆண்கள் தலை என்ற வகையில் அவர்களுக்குப் பெண்கள் மதிப்புச் செலுத்திக் கீழ்ப்படிய வேண்டும் என்று பவுல் போதித்தார். மேலும் அவர் பெண்களின் பகுதியின்மீதான அந்தக் கீழ்ப்படிதலானது வேதத்தின் உபதேசத்திற்கு இசைந்ததாகவும் இயேசுவின் கட்டளையாகவும் உள்ளது என்றும் உரைத்தார் (1 கொரிந்தியர் 14:34, 37). பேதுரு இதை, தேவனுடைய சித்தித்தின்படி செய்தவர்களாக வேதாகமத்தில் காணப்படும் மதிப்பிற்குரிய உயர்மனிதர்களால் நிலைநாட்டப்பட்ட கட்டளையின் விஷயமாக முன்வைத்தார் (1 பேதுரு 3:5, 6).*

*கணவர்/மனைவி பணிப்பொறுப்பு அல்லது சபையில் பெண்களின் பணிப்பொறுப்பு தொடர்பாக, கலாச்சாரத்தின் அடிப்படையில் வேதாகமம் எந்த முடிவுகளையும் தரவழைப்பதில்லை. பெண்ணின் பணிப்பொறுப்பு என்பது, சமூகத்தில் மாறிக்கொண்டே இருக்கிறது. கலாச்சாரங்களின் அடிப்படையில் அல்ல ஆனால் தேவனுடைய திட்டம் மற்றும் வடிவமைப்பினால் தீர்மானிக்கப்பட வேண்டும். இந்தக் கேள்வி தொடர்பான வேதாகமக் கூற்றுக்கள் யாவும் நேரடியான கட்டளைகள், தேவனுடைய படைப்பின் திட்டங்களுக்கான வேண்டுகோள்கள் அல்லது ஏதேன் தோட்டத்தில் மீறுதலினால் தேவன் கொடுத்த தண்டனை ஆகியவற்றின் அடிப்படையிலேயே உள்ளன. தேவன் தமது சுயசித்தத்தின்படியே இவைகளைச் செயல்படுத்தினார். பெண்கள் தேவனுடைய கட்டளையை மதிப்பதினால் ஆசீர்வாதங்களையோ அல்லது அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியாததினால் எதிர் விளைவுகளையோ அறுவடை செய்யக்கூடும். தேர்ந்துகொள்ளுதல் என்பது அவர்களுடைய தாகவே இருக்கிறது.*

*கலாச்சாரத்திற்கு இணங்க இயேசுவின் போதனையை மறுவடிவம் செய்கின்றவர்கள், இயேசுவின் பின்பற்றாளர்களுக்கு அவர் கொடுத்த கட்டளைகளுக்கு பதிலாக பாரம்பரியங்களைக் கட்டுவிக்கவே நாடுகின்றனர். இயேசுவின் சீஷர்கள், உலகத்தின் பாரம்பரியங்களுக்கு பதிலாக அவர் கட்டளையிட்ட எல்லாவற்றையும் கடைப்பிடிக்க வேண்டும் (மத்தேயு 28:20): "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியதக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12:2). நாம் நமது மத, ஒழுக்க மற்றும் ஆவிக்குரிய விஷயங்களில் கலாச்சாரத்தை நமது வழிகாட்டியாகக் கண்ணோக்கினால், நாம் தவறான திசைகளைக் கண்ணோக்குகின்றவர்களாய் இருப்போம். நாம், "விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற" இயேசுவை (எபிரெயர் 12:1ஆ) நோக்க வேண்டும்.*

இவ்வகையான விஷயங்கள் குறித்த கேள்வியானது, "கலாச்சாரரீதியாக ஏற்றுக்கொள்ளப்படுவது என்ன?" என்பதாயிராமல், "தேவனுடைய சித்தம் என்ன?" என்பதாகவே இருக்க வேண்டும். சூழ்நிலைகளை நாம் இவ்வாறு மதிப்பிடும்போது, நாம் தேவன் பார்க்கிறது போல் பார்க்க முடியும், மற்றும் இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரி என்ற வகையில் பெண்ணைப் பற்றித் தகுதிவாய்ந்த கருத்துநோக்கை நாம் கொண்டிருக்க வேண்டும்.

## முடிவுரை

தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் யாவற்றையும் முற்றிலும் புரிந்துகொள்வதில் நாம் இந்த வாழ்க்கையில் சிரமம் கொண்டிருக்கலாம். தேவன் அவர் செய்ததுபோல் ஆண்களையும் பெண்களையும் ஏன் இவ்வாறு படைத்தார் என்றோ அல்லது அவர் செய்ததுபோல் அவர்களின் பணிப்பொறுப்புகளை ஏன் இவ்வாறு அமைத்தார் என்றோ நாம் ஒருக்காலும் புரிந்துகொள்ள இயலாதிருக்கலாம். தேவன் ஒரு கட்டளை கொடுத்தபோது அவரது சிந்தையில் இருந்தது என்ன என்பதை நாம் புரிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுவது இல்லை. அந்தக் கட்டளையைக் கொடுத்த தேவன்மீது விசுவாசம் உள்ளவர்களாகி இருதயத்தில் இருந்து கீழ்ப்படிய வேண்டும் என்று மாத்திரம் நம்மிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தேவனுடைய வடிவமைப்பை மதித்து அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பது மாத்திரமே நமக்கு முக்கியமானதாக உள்ளது. குறிப்பிட்ட சில கட்டளைகளைத் தேவன் கொடுத்தது ஏன் என்பது பற்றிய நமது புரிந்து கொள்ளுதலினால் அல்ல, ஆனால் அவருக்கு நாம் கீழ்ப்படிதல் என்பதினாலேயே நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் (மத்தேயு 16:27; ரோமர் 2:6; 1 பேதுரு 1:17). இவ்விஷயத்தில் - மற்றும் எல்லா விஷயங்களிலும் - தேவனுடைய சித்தத்திற்குப் பதில்செயல் செய்வதில் நாம், இயேசுவினுடைய எண்ணப்போக்கைக் கொண்டிருக்க வேண்டும்; "... என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (மத்தேயு 26:39ஆ; பிலிப்பியர் 2:5).